[1987 நவம்பர் 18

இருபத்தாறாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் அறுபத்தி மூன்றாவது அறிக்கை.

(2) 1979-80 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாகச் செலவழித்த தொகை பற்றி குழு (1984-85) அளித்த முப்பத்தி இரண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி மேற்படி குழுவின் அறுபத்தி நான்காவது அறிக்கை."

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

(1) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்முறை குறித்து பொது நிறுவனங்கள் குழு (1983-84) அளித்த நாற்பத்து மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தி ஏழாவது அறிக்கை.

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79 ஆம் ஆண்டிற்கான (வணிகம்) அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1982-83) முப்பதாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் ஐம்பத்தெட்டாவது அறிக்கை.

(இ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை குழுவின் தலைவராகிய நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்: